©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 4.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 25] சென்னை, புதன்கிழமை, ஜூலை 1, 2009
ஆனி 17, திருவள்ளுவர் ஆண்டு – 2040

# பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 4, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (B2)த் துறை, நாள்: 20 ஜனவரி 2009.]*

நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் (நுகர்வோர் விவகாரங்கள் துறை) 27–08–2008 ஆம் நாளிட்ட ***இந்திய அரசிதழின்*** *சிறப்பு வெளியீட்டில்,* பாகம் II பிரிவு 3 (ii)–இல் வெளியிடப்பட்டது.

**ஆணை**

**புதுடில்லி, 27–08–2008 S.O. 2118(E)**—1955–ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரம்புகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பான ஆணையை மேற்கொண்டும் திருத்தியமைப்பதற்காக, இதனால் பின்வருமாறு ஆணையிடுகிறது.

**அவை வருமாறு:—**

**1. குறுந்தலைப்பு, பரப்பு மற்றும் தொடக்கம் :—**

(i) இந்த ஆணை, 2008ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவு பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரம்புகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகளை நீக்கும் (நான்காவது திருத்தம்) ஆணை என்று அழைக்கப்படலாம்.

(ii) இது, 1–09–2008ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

2. 2002ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரம்புகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகளை நீக்கும் ஆணையில், நெல் விற்பனை மேற்கொள்ளும் பொருட்டு நெல்லை கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், விற்பனை செய்தல், வழங்குதல், விநியோகம் செய்தல் அல்லது இருப்பில் வைத்தல் ஆகியவற்றை பொறுத்தவரையிலான சொற்களும் சொற்றொடர்களும் 01–09–2008 முதல் 30–04–2009 வரையிலான காலத்திற்கு செயல்படுத்தப்படாமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

3. இந்த ஆணையில் கண்டுள்ள எதுவும், மாநிலத்திற்கு வெளியேயுள்ள இடங்களுக்கு நெல் எடுத்துச் செல்வது, விநியோகம் செய்வது, ஒரு வகை செய்வது தொடர்பான நடவடிக்கைகளைப் பாதிக்காது மற்றும் நெல் இறக்குமதிக்கும் இது பொருந்தாது.

ஆனால், இந்த பொருள் (நெல்) இருப்புகளின் வரவினங்களையும் இறக்குமதியாளர்களால் இருத்தி வைக்கப்பட்ட இருப்புகளையும் அறிவிக்குமாறு மத்திய அரசு அல்லது மாநில அரசுகள், இறக்குமதியாளர்களுக்கு உத்தரவிடலாம்.

4. 2002ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத்தேவைகள், இருப்பு வரம்புகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகளை நீக்குதல் தொடர்பான ஆணையிலுள்ள ஏனைய விதித்துறைகள் அனைத்தும் பகுதி–2இல் குறிப்பிடப்பட்ட காலத்தில் கூட தொடர்ந்து செயலில் இருக்கும்.

(எப். எண் 10–01–2006-ECR & E)

**ராகேஷ் காக்கர்,**
*கூடுதல் செயலாளர்.*

**குறிப்பு:—**

முதன்மை ஆணை, ***இந்திய அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டில் பாகம் II, பிரிவு 3–இன் (i)ஆம் உட்பிரிவில் வெளியிடப்பட்டது. (காண்க 15–02–2002ஆம் நாளிட்ட, எண் G.S.R. 104 (E) அதன் பின்னர், பின்வரும் வகையில் திருத்தியமைக்கப்பட்டது. 16–06–2003ஆம் நாளிட்ட எண் G.S.R. 490(E) 29–08–2006ஆம் நாளிட்ட எண் S.O. 1373 (E), 27–02–2007 ஆம் நாளிட்ட எண் S.O. 297 (E), 31–08–2007ஆம் நாளிட்ட எண் S.O. 1488 (E), 28–02–2008ஆம் நாளிட்ட எண் S.O. 400 (E) மற்றும் 07–04–2008ஆம் நாளிட்ட எண் S.O. 823 (E).

**கே. சண்முகம்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 110, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, நாள்: 16 செப்டம்பர் 2008.]*

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 87ஆம் பிரிவின்கீழும், மேற்படி சட்டத்தின் 112ஆம் பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில், கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

### திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த 95ஆம் விதியில்.—

(1) துணைவிதி (1)–ல் இனம் 31–க்குப் பதிலாக கீழ்க்காணும் இனம் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

“31. எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயுக்கள் மற்றும் பெருமளவில் எரியத்தக்க திரவங்கள்”.

(2) விவர அட்டவணை XXXI-க்கு பதிலாக, கீழ்க்காணும் விவர அட்டவணை அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

**“விவர அட்டவணை–XXXI**

**எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது பயன்படுத்துதல் அழுத்தப்பட்ட வாயுக்கள் மற்றும் பெருமளவில் எரியத்தக்க திரவங்கள்:–**

1. எரியத்தக்க திரவங்கள் அல்லது அழுத்தப்பட்ட வாயுக்கள் அல்லது பெருமளவில் எரியத்தக்க திரவங்கள் தயாரிக்கப்படுகிற, சேமித்து வைக்கப்படுகிற, கையாளப்படுகிற, பயன்படுத்தப்படுகிற அனைத்து தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்.

2. *பொருள் விளக்கங்கள்:*––இந்த விவர அட்டவணையின் செயல் நோக்கத்திற்காக,

(a) ‘பெருமளவில் சேமித்து வைத்தல்’ என்பது, ஓராயிரம் லிட்டர் நீர் கொள்ளளவுக்கு மேற்பட்ட கொள்ளளவைக் கொண்டுள்ள எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயுக்களை அல்லது பெருமளவில் எரியத்தக்க திரவங்களை சேமித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிற உருண்டை வடிவமான அல்லது கோள வடிவமான அல்லது உயரமான கொள்கலன் எனப் பொருள்படும்.

(b) உருண்டை வடிவம் என்பது எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயுவை சேமித்து வைப்பதற்காகப் பயன்படுத்துகிற அரை வட்டமான அல்லது தட்டையான முனைகளையுடைய கிடைமட்ட உருளைவடிவ அழுத்தக்கலன் எனப் பொருள்படும்.

(c) வெடிக்கத்தக்க கலவை என்பது வெப்பக் கடத்தல் அல்லது வெப்பச் சலனம்மூலம் சிதறுவதைக் காட்டிலும் அதிக அளவு இயங்காற்றலை விடுவித்து, இறுதியில் வெடிக்கிற செயல்முறை விளைவை ஏற்படுத்தி, விரைவாக மற்றும் தீவிரமாக பிராணவாயுவை அளிக்கிற எதிர்வினைக்கு இடமளிக்கக்கூடிய அத்தகை வீதாச்சாரங்களில், எரியத்தக்க காரணியில் ஒரு கலவை (வாயு நிலையில், திரவ நிலையில் அல்லது திட நிலையில் உள்ள பிராணவாயு அளிக்கிற பொருள்) மற்றும் ஒரு எரிபொருள் (வாயு நிலையிலுள்ள, திரவ நிலையிலுள்ள அல்லது திட நிலையிலுள்ள பிராணவாயு அளிக்கத்தக்க பொருள்) என்று பொருள்படும்.

(d) ''தீ தடுப்பு'' என்பது, குறிப்பிட்ட அளவில் தீ தடுப்பு பொருள் அல்லது கலவையால் மேற்பூச்சு செய்வதன்மூலம் ஒரு அமைப்பு அல்லது ஒரு சாதனம் அல்லது கலன், நேரடியாக தீ அல்லது தீக்கொளுத்தினால் நேரடியாக தாக்கப்படாமல் அல்லது உயர் அடர்த்தி கொண்ட வெப்பக்கதிரால் தாக்கப்படாமல் பாதுகாத்தல் என்று பொருள்படும்.

(e) ''தீ பாதுகாப்பு'' என்பது, வால்வுகளில் பயன்படுத்துவதைப் போன்று, தீ—இன் காரணமாக சேதம் அடைந்த பின்னரும் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவுக்கு கசிவைக் கட்டுப்படுத்துகிற இரட்டை அடிப்பகுதிக்கு வகை செய்தல் என்று பொருள்படும்.

(f) ''எரியத்தக்க அழுத்தப்பட்ட வாயு'' என்பது, 1884ஆம் ஆண்டு வெடி மருந்துப் பொருள்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1884)கீழ் இயற்றப்பட்ட 1981ஆம் ஆண்டு நிலையான மற்றும் நடமாடும் அழுத்தக் கலன்கள் (தீப்பிடிக்காதது) விதிகளின் 2ஆம் விதியின் பொருள் விளக்கம் அளித்துள்ளவாறு எரியத்தக்க அழுத்தப்பட்ட வாயு என்று பொருள்படும்.

(g) ''எரியத்தக்க திரவமாக்கப்பட்ட வாயு'' என்பது, சாதாரண அறை வெப்பநிலையில் அதாவது 13 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான அழுத்தத்தைப் பயன்படுத்துவதன்மூலம் காற்றுடன் சேர்ந்து எரியத்தக்க கலவை ஏற்படுகிற நிலையில் அல்லது திரவ வாயு தீப்பற்றி எரிகிற அளவு எவ்வளவாக இருப்பினும், குறைந்தது 12 சதவீதப் புள்ளிகளில் எரியத்தக்க நிலையில் திரவ நிலையில் உள்ள எரிவாயு என்று பொருள்படும்.

(h) ''வாயுவற்றது'' என்பது, ஒரு சாதனத்தில் அல்லது ஒரு கலனில் உள்ள எரியத்தக்க வாயுவின் அடர்த்தி, வரையறைக்களுக்குள் கீழ் (எரியத்தக்க குறைந்த அளவு) உள்ள ஒரு நிலை என்று பொருள்படும். அப்போதுதான் ஒரு மனிதன், வெப்பம் சார்ந்த பணியை மேற்கொள்வதற்காக நேர்விற்கேற்ப சாதனத்திற்குள் அல்லது கலனிற்குள் நுழைவது பாதுகாப்பானதாக இருக்கும்.

(i) ''பெருமளவில் எரியத்தக்க திரவம்'' என்பது, 1934ஆம் ஆண்டு பெட்ரோலியம் சட்டத்தின் 14,15 ஆகிய பிரிவுகளில் குறிப்படப்பட்டுள்ள முறையில் சோதனை செய்கிறபோது 32 டிகிரி சென்டிகிரேடுக்கும் குறைவான வெப்பநிலையில் எரியத்தக்க ஆவியை வெளிவிடுகிற யாதொரு திரவம் அல்லது அதன் கரைசல், பசைக்குழம்பு அல்லது மிதக்கும் பொருள் எனப் பொருள்படும்.

(j) ''கோள வடிவம்'' என்பது, செங்குத்தாக தாங்கிப் பிடிக்கிற மற்றும் எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயுவை சேமித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிற அரைவட்ட அழுத்தக்கலன் என்று பொருள்படும்.

(k) ''வெப்பம் சார்ந்த பணி'' என்பது, எரியத்தக்க அல்லது வெடிக்கத்தக்க கலவையை தீப்பற்றச் செய்வதற்காக, போதிய வெப்பத்தை அல்லது ஒளிக்கீற்றை உருவாக்கக்கூடிய ஓர் நடவடிக்கை என்று பொருள்படும்.

(l) ''உயரமான கலன்'' என்பது, தரை மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளதும் குழாய்கள், மனிதன் நுழைவதற்கான துவாரங்கள் கலனின் மேல்புறத்தில் பொருத்தப்பட்டுள்ள சோதனை செய்வற்கான மூடிகள் ஆகியவை தவிர, மண் மேடால் அல்லது வேதியல் விளைவற்ற பொருளால் முற்றிலும் மூடப்பட்டுள்ளதுமான எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயுவை சேமிப்பு வைப்பதற்கான ஓர் அழுத்தக்கலன் என்று பொருள்படும்;

(m) ''தூய்மைபடுத்தல்'' என்பது, கலன் அல்லது கொள்கலன் ஒன்றின் உள்ளேயுள்ள காற்றை, வெடிக்கத்தக்க கலவை ஒன்று உருவாவதை தடுக்கும் வகையில், வேதியியல் விளைவற்ற வாயு ஒன்றின்மூலம் மாற்றுகிற ஒரு நடவடிக்கை என்று பொருள்படும்.

(n) ''தூய்மைபடுத்தல் செயல்பாட்டின் செயல்படுத்துதல்'' என்பது, மூடப்பட்டுள்ள ஏற்பாட்டு முறை ஒன்றிலுள்ள காற்றை, வேதியியல் விளைவற்ற வாயு ஒன்றின்மூலம் மாற்றுதல் பின், வேதி விளைவற்ற வாயுவை, எரியத்தக்க வாயு ஆவி அல்லது திரவம் மூலம் மாற்றுதல் என்று பொருள்படும்;

(o) ''தூய்மைபடுத்துதல் செயல்பாட்டினை நீக்குதல்'' என்பது, மூடப்பட்டுள்ள ஏற்பாட்டுமுறை ஒன்றிலுள்ள இயல்பான எரியத்தக்க பொருளை, வேதியியல் விளைவற்ற வாயு ஒன்றின்மூலம் மாற்றுதல், பின்னர் அது வாயுவற்றது மற்றும் யாதொரு நபரும் பணிபுரிவதற்கு பாதுகாப்பானது என்ற அளவிற்கு காற்றுமூலம் வேதியியல் விளைவற்ற வாயுவை மாற்றுதல் என்று பொருள்படும்.

(p) ''தூரத்திலிருந்து இயக்குகிற கருவிமூலம் இயக்கப்படுகிற வால்வு'' என்பது தூண்டு விசையை இழக்கிறபோது அல்லது தீ சூழ்ந்து கொள்கிறபோது தானாகவே மூடிக் கொள்கிற மற்றும் தீ பாதுகாப்பு கொண்டுள்ள, தூரத்திலிருந்து இயக்குகிற கருவிமூலம் இயங்கத்தக்க மூடியுள்ள வால்வு என்று பொருள்படும்.

**3. சேமிப்பிடம்:—**

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பயன்படுத்தப்படுகிற பெருமளவில் எரியத்தக்க திரவம், எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயு ஒவ்வொன்றும், போதிய தீ தடுப்பு அமைப்புடன் கட்டப்பட்ட, தரைக்குக்கீழே அல்லது திறந்த வெளியில் பாதுகாப்பான நிலையில் அமைந்துள்ள பொருத்தமான நிலையான சேமிப்புத் தொட்டியில் பெருமளவில் சேமித்து வைக்கப்பட வேண்டும்.

**4. இடம் மற்றும் அமைப்பு:—**

யாதொரு சேமிப்பு கலனுக்கான இடத்தை தெரிவு செய்வதற்கு முன்னர், இடர் பகுப்பாய்வு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். இடர் பகுப்பாய்வின் அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் ஒவ்வொரு சேமிப்புக் கலனும் அமைக்கப்பட வேண்டும் :

(a) அந்த இடத்தில், வண்டிகளின் குறுக்கீடு இருக்கக் கூடாது. ஒருங்கிணைக்கும் இடங்கள், சிற்றுண்டிச்சாலை, ஓய்வுக்கொட்டைகைகள் மற்றும் இது போன்ற பொது இடங்களை இடர் எல்லை தடுக்கக்கூடாது.

(b) யாதொரு சேமிப்புக் கலனை அமைப்பதற்கு முன்னர், மேற்கட்டுமானத்தின் பொருந்தும் தன்மைக்காக மண்ணின் நிலை மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(c) சேமிப்புக்கலன், தரைக்கு மேலே, திறந்த வெளியிலும் நல்ல காற்றோட்டமுள்ள இடத்திலும் அமைக்கப்பட வேண்டும்.

(d) மனிதன் நுழைவதற்கான துளைகளும் அழுத்தத்தை வெளிவிடுகிற வால்வுகளும், நல்ல காற்றோட்டமான நிலையில் இருக்கும் வகையில் உயரமான கலன்கள் அமைக்கப்பட வேண்டும்.

(e) சேமிப்புக் கலன்களுக்கும், கட்டிடங்கள், நாற்புற எல்லை அல்லது நிலையான எரியும் ஆதாரம் ஆகியவற்றுக்கும் இடையே உள்ள குறைந்த அளவு பாதுகாப்பு தொலைவு, அவ்வப்போது திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டு நிலையான மற்றும் நடமாடும் அழுத்தக் கலன்கள் (தீ பிடிக்காதது) விதிகளுக்கிணங்க இருக்க வேண்டும்.

(f) சேமிப்பு கலன்கள், ஒன்றின்மீது மற்றொன்று அமைக்கப்படக் கூடாது.

(g) உருண்டையான அமைப்புகள், நீளவாக்கில் உள்ள அதன் கூரான பகுதிகள், பிறகலன்கள், முக்கியமான செய்முறை சாதனம், கட்டுப்பாட்டு அறைகள், சுமை ஏற்றப்படுகிற நிலையங்கள், அருகிலுள்ள கட்டிடங்கள் அல்லது அபாயகரமான பொருட்கள் அடங்கிய சேமிப்புத் தொட்டிகளை நோக்கி நீட்டிக் கொண்டிருக்காத வகையில் அமைக்கப்பட வேண்டும்.

(h) களைகள், நீண்ட புல் இனிய மணம் கொண்ட குத்துச்செடிகள் மற்றும் யாதொரு எரியத்தக்க பொருட்கள், உரிமம் பெற்ற வளாகத்திற்குள் சேமிப்புக் கலன் உள்ள பகுதியிலிருந்து அகற்றப்பட வேண்டும்.

(i) யாதொரு வெப்ப ஆதாரத்தின் அல்லது பிற எரியத்தக்க திரவங்கள், வாயுக்கள் அல்லது ஆக்சிஜன் அளிக்கிற காரணிகளின் அடைப்புப் பகுதிக்குள், சேமிப்புக் கலன்கள் அமைக்கப்படக் கூடாது.

(j) சேமிப்புக் கலன்கள், பம்பிங் சாதனம் சுமை ஏற்றுகிற மற்றும் இறக்குகிற வசதிகள், ஆவியாக்கும் கருவிகள் ஆகியவை பாதுகாப்புப் பகுதியின் சுற்றளவு நெடுகிலும் 2 மீட்டர் உயரத்திற்காவது தனி சுற்றுச்சுவர் வேலியமைக்கப்பட்ட பகுதிகள் அமைக்கப்பட வேண்டும்.

(k) ஒரு தொகுதிக்குள் உள்ள சேமிப்புக் கலன்களின் எண்ணிக்கை ஆறுக்கு மேற்படக் கூடாது.

(l) சேமிப்புக் கலன்களின் நீளவாக்கில் அமைந்துள்ள கூரான பகுதிகள் ஒன்றுக்கொண்று இணையாக இருக்கிற வாகனம், ஒரு தொகுதிக்குள் உள்ள சேமிப்புக் கலன்கள் அமைக்கப்பட வேண்டும்.

(m) மற்றொன்றின் இயசீர்பாற்றல் காரணமாக ஒரு கலன் மிகையாக நிரம்பி விடுவதைத் தடுக்கும் வகையில் கோளங்களும், உருண்டை அமைப்புகளும் ஒன்றாகச் சேர்ந்திருக்கக்கூடாது. அவை, தனி குழாய் அமைப்பில் பல்வேறாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(n) சேமிப்புக் கலன்களிலிருந்து வீசப்படுகிற அழுத்த பாதுகாப்பு வால்வு, பிற சேமிப்புக் கலன்கள் பாதிக்காத வகையில் ஒரு தொகுதியில் நிறுவப்பட்ட சேமிப்புக் கலன்களின் மூடி மேற்பரப்பு, ஒரே தளத்தில் இருக்க வேண்டும்.

(o) யாதொரு கலனிலிருந்து வழிகிற திரவம் அல்லது வாயு ஏனைய யாதொரு கலன் வழியாகச் செல்லாதிருக்கும் வகையில் உருண்டை அமைப்புகள் அல்லது கோளங்களின் தரைப்பகுதி சரிவாக இருக்க வேண்டும்.

(p) உயரழுத்தக் கம்பி வடம், உரிமம் பெற்ற வளாகத்தின் வழியே கடந்து செல்லாதிருக்கும் வகையில் சேமிப்புக் கலன்கள் அமைக்கப்பட வேண்டும் அல்லது உரிமம் பெற்ற வளாகத்தின் அருகில் சேமிப்புக் கலன் அமைக்கப்படக் கூடாது.

(q) வெள்ளம் ஏற்படக் கூடும் என்ற ஐயப்பாட்டிற்குரிய இடங்களில் சேமிப்புக் கலன்கள் அமைக்கப்படக் கூடாது.

(r) கலன்களின் அடிப்பகுதியிலிருந்து நீர் முற்றிலுமாக வடிந்து செல்வதை உறுதி செய்வதற்காக, சேமிப்புக் கலன்களுக்கான படி, சுற்றியுள்ள பகுதிக்கு மேல் சற்று உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்; மற்றும்

(s) பெருமளவில் எரியத்தக்க திரவத்தை அல்லது எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயுவை சேமித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிற ஒவ்வொரு கொள்கலன், கலன் அல்லது சேமிப்புத் தொட்டியில், நேர்விற்கேற்ப, அபாயம் – பெரிதும் எரியத்தக்க திரவம்' அல்லது ''அபாயம் எரியும் திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயு'' என்று தெளிவாகவும், பெரிய எழுத்துக்களிலும் குறியீடு செய்யப்பட வேண்டும்.

5. *சேமிப்புக் கலன்களின் வடிவமைப்பு:—*

(1) *பொது சேமிப்புக் கலனின்* வடிவமைப்பு அழுத்தத்திற்குக் குறையாத அழுத்தங்களில் பயன்படுத்துவதற்கும், மோசமான இயக்க நிலைகளுக்கு ஏற்ற வெப்பநிலைகளுக்கும் பொருத்தமான கீழ்க்காணும் பொருத்திகள் மற்றும் சாதனங்களுடன் எரியத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட வாயுவை சேமிப்பதற்கான ஒவ்வொரு நிலையான கலனும் அமைக்கப்பட வேண்டும்; அவையாவன:—

(a) ஆவி வெளியாகிற இடத்தில் தனித்தனியாக இணைக்கப்பட்ட குறைந்த அளவு இரண்டு பாதுகாப்பு வால்வுகள்,

(b) தனித்தனியாக திரவ அளவைக் குறிப்பிடும் இரண்டு சாதனங்கள்,

(c) எச்சரிக்கை மணியுடன் கூடிய உயர்நிலை ஸ்விட்சு ஒன்று.

(d) ஆவி வெளியாகிற இடத்தில் அழுத்தத்தை அளவீடு செய்யும் கருவி ஒன்று; மற்றும்

(e) கலனில் உள்ள பொருட்களின் வெப்பநிலையை அளவீடு செய்வதற்கான வெப்பமானி ஒன்று.

(2) *கலன் இணைப்புகள்*—தீப்பற்றத்தக்க திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு அடங்கிய சேமிப்புக் கலன் ஒவ்வொன்றின்,—

(i) அனைத்து இணைப்புகளும் 2825 ஆம் இந்திய தர வடிவமைப்புக் குறியீட்டிற்கிணங்க அல்லது வெடிமருந்துப் பொருள் தலைமை கட்டுப்பாட்டாளரால் ஏற்பளிக்கப்பட்ட அதற்கு நிகரான குறியீட்டிற்கிணங்க வடிவமைக்கப்பட்டு, பொருத்தப்பட வேண்டும்.

(ii) வடிக்கும் குழாய் தவிர, இத்தகைய இணைப்புகளின் அடிப்பகுதியில், எரிவாயு பெறப்படுகின்ற மற்றும் வெளியேறுகிற செயல் நோக்கத்திற்காக, ஒரே ஒரு வாயில் முனைக்கு மட்டுமே வகை செய்ய வேண்டும்.

(iii) இந்த வாயில் முனை முழுமையாக பற்றவைக்கப்பட்ட குழாயாக இருக்க வேண்டும் மற்றும் இது, கலனின் வெளிப்புற பகுதியிலிருந்து குறைந்தளவு 3 (மூன்று) மீட்டர் தொலைவிற்கு நீட்டிக்கப்பட்டிருக்க வேண்டும். கலனின் வெளிப்புறத்திலிருந்து குறைந்தது 3 (மூன்று) மீட்டர் தொலைவில் இருக்க வேண்டும். வாயின் முனையின் அடிப்பகுதியில், கையால் மற்றும் தொலை தூரத்திலிருந்து இயக்கும் மூடுவதற்கான வால்வுக்கு வகை செய்ய வேண்டும். இந்த வாயில் முறை 1.5 டிகிரி சாய்வாக அமைக்கப்பட வேண்டும்.

(iv) வாயில் முனையானது, அழுத்தம் ஏதுமின்றி கலனோடு இணைந்து இருக்க வேண்டும்.

(v) கையால் அல்லது தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் வால்வுகளின் வாயில் முனையில் தட்டையான கருவியோ பிற கருவியோ பொருத்தப்பட்டிருக்க கூடாது.

(vi) கலனின் மேற்புறத்தில் வாயில் முனை வழியாக மிகையான திரவ எரிவாயு அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு வெளியேற வகை செய்ய வேண்டும்.

(3) *எரிவாயு அழுத்தப் பாதுகாப்பு வால்வுகள்.*— சேமிப்புக் கலன் ஒவ்வொன்றிலும்—

(i) பொருத்தப்படுகிற எரிவாயு அழுத்தப் பாதுகாப்பு வால்வுகள் லேசான சுருள்வடிவ வால்வாக இருக்க வேண்டும் (எடை மிகுந்த வால்வுகள் பயன்படுத்தப்படக்கூடாது). இத்தகைய எரிவாயு அழுத்தப் பாதுகாப்பு வால்வு ஒவ்வொன்றும், எரிவாயு அழுத்தத்தை முற்றிலுமாக, அதாவது 100 சதவீதத்திற்கு எரிவாயு வெளியேற்றும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும்.

(ii) எரிவாயு அழுத்தப் பாதுகாப்பு வால்வு வெளியேற்றும் எரிவாயுவின் அழுத்தத் திறன் 110 சதவீதத்திற்கு மேற்படாத (நூற்றுப் பத்து சதவீதம்) வகையில் கலனின் அழுத்த வடிவமைப்பு அமைக்கப்பட வேண்டும். இக்கலனில் ஏற்படும் அழுத்தத் திறனை வரையறுப்பதற்கு வெளியேற்றும் எரிவாயுவின் ஒட்டுமொத்த அழுத்தத் திறன் 120 (நூற்று இருபது) சதவீதம் என்கிற போதிய அளவில், இதன் வடிவமைப்பு இருக்க வேண்டும்.

(iii) எரிவாயு அழுத்தப் பாதுகாப்பு வால்வு வழியாக வெளியேறும் எரிவாயு, எரியக்கூடிய வசதி கொண்ட ஏற்பாட்டு முறையுடன் இணைக்கப்பட வேண்டும். இத்தகைய ஏற்பாட்டு முறை இல்லாத நேர்வில், இந்த எரிவாயுவை பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கு, கலனின் மேற்புறத்தில் குறைந்தது 3 மீட்டர் உயரத்தில், இயற்கையாக வெளியேறுவதற்கான வசதி செய்யப்பட வேண்டும். அழுத்தப் பாதுகாப்பு வால்வில் மேற்புறத்தில், எரிவாயு வெளியேறும் குழாயுடன் இணைக்கப்பட்டுள்ள தீப்பற்றாத சங்கலியுடன் இணைந்த எளிதில் திறக்கும்படியான மழைநீர் பாதுகாப்பு வசதி செய்யப்பட வேண்டும்.

(iv) கலனில் உள்ள ஒவ்வொரு எரிவாயு அழுத்த பாதுகாப்பு வால்விற்குமிடையில் தனி வால்வு ஒன்று அமைக்கப்பட வேண்டும். பொருத்தப்படுகின்ற இத்தகைய தனித்த வால்வு, குறைந்தது ஏதேனுமொரு எரிவாயு அழுத்தப் பாதுகாப்பு வால்வின் வழியாக தேவைப்படுகின்ற முழு அளவில் எரிவாயுவை வெளியேற்றுகின்ற திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட வேண்டும்.

(v) எரிவாயு அழுத்தப் பாதுகாப்பு வால்வு ஒவ்வொன்றிலும், அது வெளியேற்றும் எரிவாயுவின் அழுத்த அளவு கி. கிராமில்/ சதுர செண்டிமீட்டரில் எவ்வளவு என்பதை நன்கு தெரியும்படியாக "வரையறுக்கப்பட்ட எரிவாயுவின் அழுத்த அளவு" என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். இத்துடன், கலனில் வரையறுக்கப்பட்ட எரிவாயு அழுத்தம் 120 சதவீத அளவு என்றிருக்க, அந்த வால்வின் வழியாக, நொடி ஒன்றுக்கு உள்ளபடியாக வெளியேறுகின்ற எரிவாயுவின் அழுத்த அளவும் கனமீட்டரில் குறிப்பிடப்பட வேண்டும்.

(4) *அவசர காலத்தில் மூடும்படியான வசதி கொண்ட வால்வு.*—சேமிப்புக் கலன் ஒவ்வொன்றிலும்,

(i) எரிவாயு அழுத்தப் பாதுகாப்பு வால்வுகள் மற்றும் 25 மி.மீட்டருக்கும் குறைவான விட்டமுள்ள வடிகால் இணைப்புகள் நீங்கலாக, அனைத்து திரவ மற்றும் நீர்மப் படராவி இணைப்புகளுக்கும், அவசர காலத்தில் மூடும்படியான வசதி கொண்ட வால்வுகள். அதாவது மிகையாக வெளியேறுகின்ற திரவ மற்றும் நீர்மப் படராவி அளவைக் கட்டுப்படுத்தும் வால்வு அல்லது தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் வால்வுகள் பொருத்தப்பட வேண்டும்.

மேலும், சேமிப்புக்கலனில், மூன்று சென்டிமீட்டருக்கும் அதிகமான விட்டமுள்ள திரவ இணைப்புகளுக்கும் எட்டு சென்டிமீட்டர் விட்டமுள்ள நீர்மப் படராவி இணைப்புகளுக்கும், அவசரகாலத்தில் மூடும்படியான வசதி கொண்ட இத்தகைய வால்வுகள் தேவையில்லை.

(ii) அவசர காலத்தில், வகை செய்யப்பட்டுள்ள மூடும்படியான வசதி கொண்ட வால்வு, மிகையாக எரிவாயு வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும் வகையைச் சேர்ந்த வால்வாக இருக்கும் நேர்வில், மோசமான நிலைகளில் பாதுகாக்கின்ற, இந்த இணைப்பில் ஏற்படக்கூடிய சேதம் காரணமாக, இந்த இணைப்புக் குழாய் எந்த அளவிற்கு எரிவாயுவை வெளியேற்றும் என்று கணக்கிடப்பட்டுள்ளதோ அந்த அளவைக் காட்டிலும் குறைவான அளவில் இந்த வால்வு எரிவாயுவை வெளியேற்றும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். மிகையாக எரிவாயு வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும் வால்வின் வெளியேற்றும் திறன், சாதாரணமாக எரிவாயு வெளியேறும் திறனளவைக் காட்டிலும் அதிகமாகவும் வால்வில் ஏற்படும் இரைச்சலைத் தடுப்பதாகவும் இருக்க வேண்டும்.

5. *சேமிப்புக் கலனின் அடிப்பகுதியில் தங்கும் நீரை வெளியேற்றும் அல்லது வடிக்கும் வால்வு*—சேமிப்புக் கலன் ஒவ்வொன்றிலும்,—

(i) தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் வால்வு மற்றும் முதல் தனி வால்விற்குமிடையே, கலனின் அடிப்பகுதியில் நீரை வெளியேற்றுகின்ற இரு வால்வுகள், அமைக்கப்பட வேண்டும். நீரை வெளியேற்றுகின்ற இந்த இரு வால்வுகளுக்கிடையே இருக்கும் இணைப்புக் குழாயின் நீளம் குறைந்தது 0.5 மீட்டராக இருக்க வேண்டும். இது, திரவ எரிவாயுவிலுள்ள நீர் உறைந்து, அதன் காரணமாக ஒரே சமயத்தில் இரு வால்வுகளிலும் தடை ஏற்படும் இடர்பாட்டினை குறைக்க உதவும். நீரை வெளியேற்றும் இணைப்புகளின் விட்டம் 50 (ஐம்பது) மில்லி மீட்டருக்கு மேற்பட்டு இருத்தல் கூடாது.

(ii) கலனிலிருந்து அமைக்கப்படுகின்ற, நீரை வெளியேற்றுகின்ற முதல் வால்வு, கதவு அமைப்பு வகையில் (நீரைக் கட்டுப்படுத்துகின்ற வால்வு வகை) இருக்க வேண்டும். இதன் இரண்டாவது வால்வு உடனடியாக மூடும் வசதி கொண்ட வகையில் இருக்க வேண்டும்.

(iii) நீரை வெளியேற்றும் இணைப்புக் குழாய்கள் மற்றும் அது தொடர்பான இணைப்புகளின் கட்டுமானப் பொருட்கள், தட்பவெப்ப சூழ்நிலைகளை தாங்கிக் கொள்வதற்கேற்ப இருக்க வேண்டும்.

(6) *"மாதிரி வால்வு".*—சேமிப்புக் கலன் ஒவ்வொன்றிலும், மாதிரி சோதனையிடும் நோக்கத்திற்காக, தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் வால்விற்கும், முதல் தனி வால்விற்குமிடையில், 0.5 மீட்டர் நீளத்திற்கு குறைவான உரிய இடைவெளியில், இரு வால்வுகள் பொருத்தப்பட வேண்டும். (தொலைதூர குழாய் அமைப்பதற்கான முக்கிய நோக்கம், வால்வின் மேற்புரத்தில் ஏற்படும் பனிக்கட்டிப் பிரச்சினைகளைத் தவிப்பதற்கே ஆகும்.)

(7) *திரவ நிலையை அளக்கும் சாதனம்.*—சேமிப்புக் கலன் ஒவ்வொன்றிலும், அமைக்கப்பட்டுள்ள இரண்டு வகை அளவிடும் கருவிகளில், ஒன்று மிதவை வகையாகவும், 'ஹார்டன் ஸ்பியர்' இனத்தில் எரிவாயு அழுத்தத்தின் வேறுபாட்டை கண்டறியும் பிற வகையாகவும் இருத்தல் வேண்டும். 'எரிவாயு அழுத்தத்தின் வேறுபாட்டை கண்டறியும்' வகைக்குப் பதிலாக, மிதவை காந்த வகை அளவிடும் சாதனம் பயன்படுத்தலாம். கலனில், 85 சதவீதத்திற்கு மேற்படாத (எண்பது சதவீதம்) கொள்ளளவுத் திறனில் இயக்குவதற்கு, 'உயர்நிலை' எட்டியதற்கான அளவைக் காட்டுகின்ற எச்சரிக்கை மணி பொருத்தப்பட வேண்டும். இச்சாதனத்தை இயக்குபவரின் இருக்கையில், 'உயர்நிலை' குறித்த எச்சரிக்கை தொடர்பான, ஒலி—ஒளி சாதனமும் பொருத்தப்பட வேண்டும்.

(8) *எரிவாயு அழுத்தத்தை அளவிடும் கருவி.*—சேமிப்புக் கலன் ஒவ்வொன்றிலும், எரிவாயு அளவை உரியவாறு கணக்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்டு எரிவாயு அழுத்த அளவைக் கண்டறிவதற்கு குறைந்தது ஒரு அளவிடும் சாதனமாவது இருக்க வேண்டும் மற்றும் வரையறுக்கப்பட்ட எரிவாயு அழுத்த அளவு 15 மடங்கு குறையாத அளவைக் கொண்டதாகவும், எளிதில் காணக்கூடியதாகவும், எல்லா நேரங்களிலும் கலனில் இருக்கும் எரிவாயு அழுத்த அளவை துல்லியமாக காட்டுகின்றவாறும் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். கலனின் மேற்பரப்பில் நீர்மப் படராவி இடத்தில் இது அமைக்கப்பட வேண்டும். கலனுக்கும், எரிவாயு அழுத்தத்தை அளவிடும் சாதனத்திற்குமிடையே பொருத்தமான 'நிறுத்த' வால்வு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

(9) *எரிவாயு கசிவைக் கண்டறியும் கருவி.*—தீப்பற்றக்கூடிய திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவிற்கான சேமிப்புக் கலன் ஒவ்வொன்றிலும், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் எச்சரிக்கை மணியுடன் கூடிய எரிவாயு கசிவைக் கண்டறியும் கருவி அமைக்கப்பட வேண்டும் மற்றும் எரிவாயு கசிவு ஏற்படுகின்ற நேர்வில், எரிவாயு கசிவைக் கண்டறியும் இத்தகைய கருவிகள் எரிவாயு அழுத்தத்தை நிறுத்தி விட வேண்டும் அல்லது இயக்க நிலையில் இருக்கும்போது நீர் வாங்கு குழாயாக செயல்பட வேண்டும்.

(10) *எரிவாயு கலனில் பிணணப்பு.*—சேமிப்புக் கலன் மற்றும் அதன் இணைப்புக் குழாய்கள் ஒவ்வொன்றிலும், தட்டையான கருவிகளுக்கிடையே பிணைப்பு ஏற்படுத்துவதன் வாயிலாக, தொடர் மின்சாரத்தை வைத்து வர வேண்டும்.

(11) *மிகை அழுத்த ஒலி வால்வுகள்.*—தீப்பற்றக்கூடிய திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவை கொண்டு செல்லும் இணைப்புக் குழாய்களின் தனி வால்வுகளுக்கிடையே, 'மிகை அழுத்த ஒலி' வால்வுகள் அமைக்கப்பட வேண்டும்.

(12) *நீராவியாக்கும் கருவியின் திறன்.*—தீப்பற்றக்கூடிய திரவ எரிவாயு சேமிப்புக் கலனுடன் இணைக்கப்பட்ட நிராவியாக்கும் கருவி, வரையறுக்கப்பட்ட தேவையான அளவில் தீப்பற்றக்கூடிய திரவ எரிவாயு பெறும் திறன் கொண்டிருக்க வேண்டும்.

6. *தீப்பற்றுவதை தடுத்தல்.*—எளிதில் தீப்பற்றக்கூடிய திரவம்அல்லது தீப்பற்றக்கூடிய திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு சேமித்து வைக்கப்பட்டுள்ள, எடுத்துச் செல்லப்படுகின்ற, கையாளப்படுகின்ற அல்லது பயன்படுத்துகின்ற ஒவ்வொரு இடத்திலும், அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய திரவ அல்லது திரவமாக்கப்பட்ட அழுத்தப்பட்ட எரிவாயு சேமிக்கப்படுவதால், அவை காற்றில் கலந்து தீப்பற்றக்கூடிய அல்லது வெடிக்கக்கூடிய அபாயம் ஏற்பட வாய்ப்புள்ள ஒவ்வொரு இடத்திலும், தீப்பற்ற வாய்ப்புள்ள ஆதாரங்களை விலக்கி வைப்பதற்குரிய அனைத்து நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய முன் எச்சரிக்கை நடவடிக்கைகளில் பின்வருவனவும் அடங்கும். அவையாவன.—

(a) அபாயத்திற்குரிய இப்பகுதியிலிருந்து அனைத்து மின் கருவிகளும் நீக்கப்பட வேண்டும் அல்லது தீப்பற்றும் அபாயம் ஏற்படுவதை தடுக்கும் வகையில், இக்கலனின் கட்டுமானம் இருக்க வேண்டும், நிறுவப்பட வேண்டும் மற்றும் பராமரிக்கப்பட வேண்டும்.

(b) சேர்ந்து வரும் எரிவாயு அழுத்த மாற்றங்கள், அபாயம் விளைவிக்கும் அளவை எட்டிவிடாமல் தடுப்பதற்கு, முனைப்பான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(c) இரும்பு அல்லது உருக்கு ஆணிகள் பொருத்தப்பட்ட காலணிகள் அல்லது உராய்வின் மூலம் நெருப்புப் பொறி ஏற்படக்கூடிய இரும்பு சார்ந்த யாதொரு பொருள்களை அணிவதற்கு யாதொரு நபரும் அனுமதிக்கப்படக்கூடாது.

(d) புகைப்பிடித்தல், விளக்கு அல்லது தீப்பெட்டிகள் எடுத்துச் செல்லுதல், புகைப்பிடிக்கும் கருவிகள் அல்லது சிகரெட் லைட்டர்கள் எடுத்துச் செல்லுதல் ஆகியவை தடை செய்யப்பட வேண்டும்.

(e) இரும்பாலான அடிப்பகுதி கொண்ட அனுப்புகை 'போல்டுகள்' எதுவும் பயன்படுத்தக்கூடாது.

(f) தீப்பற்றத் தொடங்குவதற்கு சாத்தியமான ஏனைய அனைத்து ஆதாரங்களிலிருந்தும், அதாவது, விளக்குகள், உராய்வினால் ஏற்படக்கூடிய தீப்பொறிகள், அதிக வெப்பம் ஏற்படுத்தக்கூடிய இயந்திரம் அல்லது தளவாடம், இரசாயனம் அல்லது இயற்பியல்–வேதியியல் எதிர் விளைவுகள் மற்றும் தாவு வெப்பம் போன்ற அனைத்து ஆதாரங்களின் மூலம் தீப்பற்றத் தொடங்குவதை தடுப்பதற்கு, நடைமுறையில் சாத்தியமான ஏனைய பிற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**7.** *எளிதில் தீப்பற்றக்கூடிய திரவங்களை மூடப்பட்ட நிலையில் எடுத்துச் செல்வதற்கான சாதனங்கள்.—*

எளிதில் தீப்பற்றக்கூடிய திரவங்களை, சேமிப்புத் தொட்டியிலிருந்து, கலனிலிருந்து பயன்பாட்டு இடங்களுக்கு எடுத்துச் செல்லும்போது நடைமுறையில் சாத்தியமான நேர்வுகளிலெல்லாம், இயன்றவரையில், முற்றிலுமாக மூடப்பட்ட நிலையில், அதாவது இணைப்புக் குழாய்கள், குழாய்கள் மற்றும் இது போன்ற கருவிகளின் வாயிலாக எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மூடப்பட்ட நிலையில் திரவங்களை எடுத்துச் செல்லும் இத்தகைய சாதனங்கள் கசிவு ஏற்படுவதை தவிர்க்கும் வகையிலும் அல்லது திரவம் வழிந்தோடுவதை தவிர்க்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டு, நிறுவப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, வைத்து வரப்பட வேண்டும்.

**8.** *புகைப்பிடிப்பதை தடை செய்தல்,—*

புகைப்பிடிப்பது தீப்பற்றக்கூடிய இடர்பாடுகளை ஏற்படுத்தும் என்கிற சூழ்நிலையில், எளிதில் தீப்பற்றக்கூடிய திரவம் அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு இருக்கும் யாதொரு இடத்தில், எந்தவொரு நபரும் புகைப்பிடிப்பது அனுமதிக்கக் கூடாது. இத்தகைய எச்சரிக்கை தேவைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு இடத்திலும் 'புகைப்பிடிப்பது தடை செய்யப்பட்டது' என்று குறிப்பிட்டு, கொட்ட எழுத்துக்களில் அறிவிப்பு செய்வது போன்ற அனைத்து நடைமுறை வகையிலான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர் எடுக்க வேண்டும்.

**9.** *தீ தடுப்பு நடவடிக்கை.*–ஒவ்வொரு *தொழிற்சாலைகளிலும்,—*

(1) எளிதில் தீப்பற்றக்கூடிய திரவம் அல்லது தீப்பற்றக்கூடிய திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு சேமித்து வைக்கப்பட்டுள்ள இடர் பாதுகாப்பு பகுதிக்குள் வண்டிப் போக்குவரத்து ஏதும் அனுமதிக்கப்படக்கூடாது. அவ்வாறு வண்டி எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப்பகுதிக்குள் நுழைவதற்கு செல்திறன் அனுமதி வைத்துள்ள, தீப்பொறி தடுப்பான்கள் அமைக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டுள்ள வண்டிகள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும்.

(2) பெருமளவில் சேமித்து வைப்பதற்கு அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய திரவம் அல்லது எளிதில் திரவமாக்கப்பட்ட அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவை கையாளுவதற்கு பயன்படுத்துகின்ற அனைத்து கலன்களும், தீப்பற்றக்கூடிய அபாயத்திற்கு எதிராக பாதுகாக்கப்பட வேண்டும்.

(a) தரைப்பரப்பிற்கு மேற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து சேமிப்பு கலன்கள் அல்லது எரிவாயு சேமிக்கும் அல்லது நிரப்பும் உருளைகள் அல்லது எரிவாயு பழுதுபார்ப்பு கூடங்கள், நீரேற்று இல்லங்கள், அதிக அளவில் எரிவாயு எடுத்துச் செல்லும் லாரிகள் மற்றும் எரிவாயு நிரப்பும் தொட்டி வசதி கொண்ட லாரிகள் ஆகிய அனைத்திற்கும் நடுத்தர வேகத்தில் நீரைப் பீய்ச்சி அடிக்கும் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

(b) மொத்த சேமிப்பிடங்கள், தொடர்வண்டி 'டிரக்' அல்லது தொடர்வண்டி வேகன் கேண்ட்ரி, பம்பு அல்லது அழுத்தக் கருவி நிலையம் மற்றும் ஆவியாக்கும் கருவி போன்ற அனைத்து முக்கிய இடங்களிலும் தீப்பிடித்தவுடன், தானே இயங்கும் நடுத்தர வேகமுள்ள நீரைப் பீய்ச்சியடிக்கும் ஏற்பாட்டு முறை அமைக்கப்பட வேண்டும்.

(c) நடுத்தர வேகமுள்ள நீரைப் பீய்ச்சியடிக்கும் ஏற்பாட்டு முறை, வெப்பம் மற்றும் இதுபோன்ற ஏனையவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும்.

(d) 79 டிகிரி செண்டிகிரேட் (உயரளவு) அளவில் காற்று வீசியடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட குவார்கோயிட் பல்பு (Quart Zoid Bulb) பாதுகாப்பு முறை திறந்த வெளியிடங்களில் அல்லது கொட்டகைகளில் அமைக்கப்பட வேண்டும்.

(e) தீத்தடுப்பு சாதனம் இயங்கி பின்வருவனவற்றை உடனடியாகச் செயல்படுத்த இயலும் வகையில் நடுத்தர வேகமுள்ள நீரைப் பீய்ச்சியடிக்கும் ஏற்பாட்டு முறை செயல்பட வேண்டும்.

(i) நீரை வாரி அடிக்கும் வால்வைத் திறத்தல்.

(ii) தீயணைப்பு பம்பு நிலையத்தில் அல்லது கட்டுப்பாட்டுப் பிரிவில் ஒலி–ஒளி எச்சரிக்கை மணி.

(iii) தீ அபாய மணி.

(iv) முதன்மை வளையத்தில் நீரின் அழுத்தத்தைப் பராமரிக்க அல்லது அணைத்து செயல்படுத்துவதற்காக 'நிர்ணயிக்கப்பட்ட அழுத்தத்தின்' அடிப்படையில் டீசல் பம்பு செயல்படத் தொடங்கும்.

(f) எளிதில் தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவைப் பொறுத்தமட்டில், ஒரு நிமிடத்திற்கு ஒரு சதுர மீட்டருக்கு குறைந்தது 10 லிட்டர் தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் திறன் உடையதாக நடுத்தர வேகமுள்ள நீரைப் பீய்ச்சியடிக்கும் ஏற்பாட்டு முறை இருக்க வேண்டும். மிக எளிதில் தீப்பிடிக்கும் திரவத்தைப் பொறுத்த வரையில், தனிமைப்படுத்தப்பட்ட அபாயகரமான பகுதிக்கு ஒரு நிமிடத்திற்கு, ஒரு சதுர மீட்டருக்கு குறைந்தது 3 லிட்டர் தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் திறன் உடையதாக இருக்க வேண்டும்.

அபாயகரமான பகுதியைக் கணக்கிடுவதற்காக பின் வருபவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(i) மொத்த சேமிப்பிடங்களைப் பொறுத்தவரையில் Rt. 30 மீட்டர் தொலைவிற்குள் (R என்பது கலனில் ஆரம்) உள்ள அடுத்த கலனின் புறப்பரப்பிலிருந்து 30 மீட்டர் கணக்கிடப்பட வேண்டும்.

(ii) தொடர்வண்டி லாரி கேண்டிரியை (Gantry) பொறுத்தமட்டில் உயரளவு 8 பகுதிகள் (bays) தனிமைப்படுத்தப்பட்ட அபாயகரமான பகுதிகளாக கருத்தில் கொள்ள வேண்டும்.

(iii) தொடர்வண்டி, வேகன் கேண்டிரியைப் பொறுத்தமட்டில் உயரளவு ஒரு கேண்டிரி (600 மெட்ரிக்டன்) தனிமைப்படுத்தப்பட்ட அபாயகரமான பகுதியாகக் கொள்ளப்பட வேண்டும்.

(3) (a) எளிதில் தீப்பற்றக்கூடிய திரவ எரிவாயு அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவை சேகரித்து கையாளும் இடங்களைச் சுற்றிலும் ஒரு மையத்திலிருந்து இன்னொரு மையம் வரை 30 மீட்டர் அளவுள்ள நீர்க்குழாயுடன் அல்லது கண்காணிப்புக் கருவியுடன் தீயணைப்பு நீர்க்குழாய் வளையம் அமைக்கப்பட வேண்டும். உரிமம்பெற்ற இடங்களுக்கு வெளியே நீர்க் குழாய்களும் கண்காணிப்புக் கருவிகளும் அமைக்கப்பட வேண்டும்.

(b) தொழிற்சாலையில் ஒதுக்கமான இடத்தில் குறைந்தளவு அழுத்தம் 7 கி.கி./ச.செ.மீ அளவில் தீயணைப்பு நீரழுத்த முறை வடிவமைக்கப்பட வேண்டும்.

(c) இம்முறையில் அனைத்து திசைகளிலும் நீரைப் பீய்ச்சியடிப்பதை உறுதி செய்யும் பொருட்டு மூடிய மடிப்பு வளையத்தில் நீர்க்குழாய் கட்டமைப்பு இருக்க வேண்டும். இந்தக் கட்டமைப்பின் எந்த ஒரு பகுதியும் பாதிக்காமல் மற்றொரு பகுதியை துண்டிக்க இயலும் வகையில் வால்வுகள் பொருத்தப்பட வேண்டும்.

(d) தொழிற்சாலையிலுள்ள தீயணைப்பு நீர்க்குழாய் ஏற்பாட்டுமுறை, ஒரு சமயத்தில் அபாயகரமான பகுதிக்கு நடுத்தர வேகத்தில் தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் வகையில் அதிக அளவு நீரைச் செலுத்தும் திறன் இருக்கும் வகையிலும் தீயணைப்பு நீர் கண்காணிப்புக் கருவிகள் இரண்டினை இயக்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு 288 மீட்டர் என்ற அளவுடனும் வடிவமைக்கப்பட வேண்டும்.

(4) (a) நீர்க்குழாய்களுக்கு தேவைப்படும் நீர், நிலத்தடி கான்கீரிட் சேமிப்பிடங்களில் அல்லது மேற்பரப்பில் உருக்கு அல்லது கான்கீரிட் தொட்டியில் எளிதில் நீர் எடுத்துச் செல்லும்படி இத்தொட்டிகளில் நீர் சேமித்து வைக்கப்பட வேண்டும்.

(b) தீயணைப்புக்காக திறம்பட சேமித்து வைக்கப்படும் நீர் நான்கு மணி நேர தீயணைப்புக்கு போதுமானதாக இருக்க வேண்டும்.

(c) தீயணைப்புக்காக நீர் சேமித்து வைக்கப்படும் தொட்டி அல்லது நீர் சேமிப்பிடம், எளிதில் சுத்தப்படுத்தவும், பழுது பார்க்கவும் இயலும் வகையில் ஒன்றையொன்று இணைக்கப்பட்ட இரு பகுதிகளாக அமைக்கப்பட வேண்டும்.

(5) இந்திய தர அமைப்பு ஏற்பளித்தவாறு தீ கையில் எடுத்துச் செல்லத்தக்க தீயணைப்பு கருவிகள், பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு வசதியான இடங்களில் அமைக்கப்பட வேண்டும்.

**அட்டவணை**

| *பகுதி* | *கையில் எடுத்துச் செல்லத்தக்க தீயணைப்புக் கருவிகள்* |
|---|---|
| (1) | (2) |
| 1. எளிதில் தீப்பற்றத்தக்க திரவ எரிவாயு அல்லது சேமிப்பு கலன்கள் (ஒவ்வொன்றும்) | 10 கி.கி. உலர் இரசாயனப் பொருள்கள்– 2 எண்ணிக்கை |
| 2. தொடர் வண்டி வேகனிலிருந்து இறக்கும் அல்லது ஏற்றும் கேண்டிரிகள். | 10 கி.கி. உலர் இரசாயனப் பொருள்கள்– 1 எண்ணிக்கை 5/20 மீட்டர் கேண்டிரி ஒவ்வொன்றுக்கும் ஒரு தீயணைப்பு கருவி. |
| 3. தொடர்வண்டி டிராக்கிலிருந்து இறக்கும் அல்லது ஏற்றும் கேண்டிரிகள் | 10 கி.கி. உலர் இரசாயனப் பொருள்– 1 எண்ணிக்கை ஒவ்வொரு பகுதியிலும் (Bay) ஒரு தீயணைப்புக் கருவி 50 கி.கி. உலர் இரசாயனப் பொருள் இயல் யூனிட் கேண்ட்ரி. |

தீயணைப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் உலர் இரசாயனப் பொருள் IS:4038 இன்படி பொட்டாசியம் அல்லது யூரியாவை அடிப்படையாகக் கொண்டதாக அல்லது சோடியம் பை கார்பனேட்டாக இருக்க வேண்டும். வெளியேற்றப்படும் வாயு அதாவது N2/CC2 சிறந்த தரமுள்ளதாக இருக்க வேண்டும்.

10. *எளிதில் தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவை தொழிற்சாலையில் ஏற்றி இறக்கும் வசதிகள்:—*

(1) *ஏற்றும் வசதிகள்.*—எளிதில் தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு ஏற்றப்படும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும், ஏற்றும் நிலையத்தில் பின்வருபவை இருக்க வேண்டும்:–

(a) தனிவால்வு மற்றும் சோதனை வால்வுடன் எரிவாயுவை நிரப்பும் குழாய்

(b) ஆவி திரும்பச் செல்லும் குழாய் தனி வால்வு மற்றும் சோதனை வால்வுடன் சேமிப்புக் கலனுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இதிலிருந்து தான்–எளிதில் தீப்பற்றத்தக்க எரிவாயு குழாய் மூலம் எடுத்துச்செல்லப்படுகிறது.

(c) தொடர்வண்டி டிராக் கலன்களுடன் அல்லது தொடர்வண்டி வேகன்களுடன் இணைப்பதற்காக எரிவாயுவை நிரப்பும் குழாயின் முனையிலும் ஆவி திரும்பிச் செல்லும் குழாயின் முனையிலும் எரிவாயுவை அனுப்ப தக்க வசதி அல்லது வளையத்தக்க குழாய்கள் பொருத்தப்பட வேண்டும்.

(d) அடைத்து வைக்கப்பட்ட திரவம் வெப்பத்தால் விரிவடையும்போது ஏற்படும் அதிக அழுத்தத்திலிருந்து பாதுகாப்பதற்காக, மூடும் வால்வுகளிடையே வெப்ப அழுத்தத்தை வெளியேற்றும் தக்க வால்வுகள் பொருத்தப்பட வேண்டும்.

(2) *இறக்குதல்:*—எளிதில் தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு இறக்கப்படும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும், இந்த எரிவாயு அனுப்பப்படும் கலத்திலிருந்து அதிக அழுத்தத்துடன் அவ்வாயு பெறப்படும் கலத்தில் ஆவியை திரும்பப் பெறுவதன் மூலம் பெறப்படும் மற்றும் அனுப்பப்படும் கலன்களிடையே வெவ்வேறு அழுத்தத்தின் மூலம் இந்த எரிவாயுவை அனுப்புவதற்காகப் பயன்படுத்தப்படும் அழுத்தும் கருவியில் பின்வரும் வசதிகள் இருக்க வேண்டும்:–

(a) திரவத்தை அனுப்பும் சோதனை வால்வுடன் தனி வால்வு மற்றும்

(b) ஆவி செல்லும் குழாயில் தனி வால்வுகள்

(3) *எரிவாயுவை ஏற்றி இறக்கும் பணிகள்.*—எளிதில் தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவை ஏற்றி இறக்கும் பணி நடைபெறும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும்:—

(a) எரிவாயுவை ஏற்றி இறக்கும் பணி பற்றிய எழுத்து மூலமான நடைமுறைகள், பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு சோதனை மற்றும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள், இத்தகைய பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் கடமைகள் ஆகியவற்றை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி அவர்களிடம் அளிப்பதுடன், பணியிடத்தில் காட்டி வைக்கப்பட வேண்டும்.

(b) எளிதில் தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவை தொடர்வண்டி டிராக்கிலிருந்து / டிரக்குக்கு அல்லது தொடர் வண்டி வேகனிலிருந்து / வேகனுக்கு அனுப்புவதற்கு பயன்படுத்தப்படும் மடிப்புக் குழாய்கள் பின்வருமாறு இருக்க வேண்டும்:—
.

(*i*) 1981 ஆம் ஆண்டு நிலையான மற்றும் இயல் அழுத்த கலன் (தீப்பிடிக்காத) விதிகளின்படி வடிவமைக்கப்பட்டு, அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(*ii*) தனி அடையாளம் இருக்க வேண்டும்.

(*iii*) மின் மற்றும் இயந்திர அம்சங்கள் பழுதின்றி இருப்பதை வசதி செய்வதற்கும் பதிவேட்டில் பதிவு செய்வதற்கும் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை சரிபார்க்கப்பட வேண்டும்.

(c) குழாய்களை இணைப்பதற்கு அல்லது பிரிப்பதற்கு தீப்பொறி வராத கருவிகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

(d) தொடர்வண்டி டிரக்குகளில் தீப்பொறி வராத அல்லது தீப்பிடிக்காத வகை மோட்டார் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(e) தொடர்வண்டி டிரக்கு சமமான தரையில் நிறுத்தப்படுவதுடன், வண்டி நகருவதால் விபத்து ஏற்படும் அபாயத்தைத் தடுக்கும் பொருட்டு முன் மற்றும் பின் சக்கரங்களில் தடுப்புகள் வைக்கப்பட வேண்டும்.

(f) ஏற்றி இறக்கும் பணி தொடங்கப்படுவதற்கு முன்னர், வண்டியின் இன்ஜின் நிறுத்தப்பட வேண்டும். அனைத்து மின் சாதனங்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட வேண்டும்.

(g) ஏற்றி இறக்கும் பணி தொடங்கப்படுவதற்கு முன்னர், சேமிப்பு கலன்கள் மற்றும் தொடர்வண்டி அல்லது வேகன்களில் மின் இணைப்பு (Bonding) மற்றும் மின் அதிர்வு (earthing) பாதுகாப்புக்கு வகை செய்வதன் மூலம் மிகையாக உள்ளதை வெளியேற்றிவிட வேண்டும்.

(h) தொடர்வண்டி அல்லது வேகனுக்கு குறிப்பிட்ட இடத்தில் நிலத்துடன் மின் தொடர்பு அளிக்க வேண்டும்.

(i) அனுமதியளிக்கப்பட்ட நபர் இப்பணிகளை மேற்பார்வை செய்து, அவசரநிலை ஏற்பட்டால் உடனடியாகச் செயல்பட வேண்டும்.

(j) எரிவாயுவை ஏற்றும் பணியைச் செய்யும்போது, எரிவாயு அனுப்பப்படும் தொடர்வண்டி டிரக்கில் அழுத்தம், அழுத்த வெளியேற்றும் வால்வின் ''செயல்படத் தொடங்கியவுடன் வெளியேற்றப்படும்'' அழுத்தத்தை அணுகவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். எரிவாயுவை நிரப்பும் வீதம் தேவைக்கேற்றவாறு முறைப்படுத்தப்பட வேண்டும்.

(k) 1 கி.மீ. சதுர செ.மீட்டருக்குக் குறைவான உள் அழுத்தம் உள்ள எரிவாயு பெற்றுக்கொள்ளும் கலன்களில் எரிவாயுவை நிரப்ப அனுமதியளிக்கப்படக் கூடாது. ஆக்ஸிஜன் அல்லது வெடிமருந்து கலவை உள்ளதா என்று சோதனை செய்யப்பட வேண்டும். தேவைப்படின் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(l) எரிவாயுவை நிரப்பும் அல்லது வேறு ஒரு கலனுக்கு மாற்றும் பணி பகல் நேரத்தில் மட்டுமே செய்யப்படவேண்டும்.

(m) எரிவாயுவை நிரப்பும் அல்லது வேறு கலனுக்கு மாற்றும் பணி பின்வரும் நேர்வுகளில் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் அதாவது:—

(*a*) கட்டுபடுத்த இயலாத அளவுக்கு கசிதல்

(*b*) அருகில் தீ ஏற்படுதல்

(*c*) மின்னல் மற்றும் இடி—புயல்

(*n*) எரிவாயுவை இறக்குவதற்காக ''பாதுகாப்பான பணி நடைமுறைகளை'' எரிவாயு இறக்குமிடத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் தெளிவாகக் காட்டி வைக்கப்பட வேண்டும்.

**11.** *பராமரிப்பு மற்றும் ஆய்வு:—*

எளிதில் தீப்பற்றத்தக்க திரவம் அல்லது தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு பெருமளவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தொழிற்சாலையிலும்:—

**1.** சேமிப்பு கலன்கள், பாதுகாப்புப் பொருத்திகள் மற்றும் சாதனங்கள், பொருந்தத்தக்க பல்வேறு சட்டங்களின்கீழ் குறிப்பிட்டவாறு, குறிப்பிட்ட கால இடைவெளியில் சோதனை செய்யப்பட வேண்டும்.

**2.** ஏற்றி இறக்கும் குழாய்கள் குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சோதனை செய்யப்பட வேண்டும்.

**3.** மண்குழிகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். மண்ணின் தாங்குத்திறன் குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறை அளவிடப்பட வேண்டும். இது தொடர்பாக பதிவேடுகள் வைத்து வரப்பட வேண்டும்.

**4.** அடிப்பரப்பு மண் பாதிக்கப்படுவதால் சேமிப்புக் கலன்களின் அஸ்திவாரம் மற்றும் தாங்கிகள் பாதிக்கப்படுகின்றனவா என்பதை ஆண்டுக்கு ஒருமுறை சோதனை செய்ய வேண்டும்.

**5.** எதிர்மண் ஆற்றல் அளிக்கப்பட்டிருந்தால், குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணித்து செம்மையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

**6.** எரிவாயு கண்டறியும் முறை சோதனை செய்யப்பட்டு குறிப்பிட்ட கால இடைவெளியில் அதன் திறனைக் கண்டறிய வேண்டும்.

**7.** தீத்தடுப்பு நீர் பம்புகள், நீர்க்குழாய்கள் அல்லது கண்காணிப்புக் கருவிகள், குழாய் கட்டமைப்பு மற்றும் நீரைப் பீய்ச்சும் கருவிகள் அல்லது நீரை வாரி இறைக்கும் கருவிகள் உட்பட தீயணைப்பு நீர் ஏற்பாட்டு முறையை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை சோதனை செய்து, பாதுகாப்புடன் பணியாற்றும் வகையில் பராமரிக்கப்பட வேண்டும்:—

**12.** *பயிற்சி எளிதில் தீப்பற்றத்தக்க திரவம் அல்லது தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயு பெருமளவில் சேமித்து வைக்கப்பட்ட தொழிற்சாலையின் உரிமையாளர் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும் :—*

**(1)** எளிதில் தீப்பற்றத்தக்க திரவத்தை அல்லது தீப்பற்றத்தக்க திரவ அல்லது அழுத்தப்பட்ட எரிவாயுவை பாதுகாப்பாக சேமித்து வைத்தல், கையாளுதல் குறித்த அனைத்து அம்சங்கள் மற்றும் பேரழிவுக் கட்டுப்பாடு அல்லது தயார் நிலையில் இருந்து செயல்படுதல் ஆகியவற்றின் மேற்பார்வை அல்லது நிருவாகப் பணியாளர்களுக்கு போதிய அளவில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

**(2)** (a) முறையான தொழிலாளர்கள்;

(b) ஒப்பந்தத் தொழிலாளர்கள்;

(c) பாதுகாப்புப் பணியாளர்கள்

ஆகியோருக்கு ஏற்றுதல் அல்லது இறக்குதல் பணிகள், முழுமையாக அகற்றும் நடைமுறைகள், தொடங்கும் நிறுத்தும் நடைமுறைகள் ''இடர் நிறைந்த பணிகளுக்கு'' அனுமதி அளிக்கும் முறை, தீயணைப்பு அல்லது அவசரகாலப் பணி, சுகாதாரக் கேடுகள் ஆகியவற்றில் முறையான பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

(3) தயார்நிலையில் இருப்பதையும், தடுப்பு நடவடிக்கைகள் போதிய அளவில் உள்ளதா என்பதையும் மதிப்பிடும் பொருட்டு, தொழிற்சாலையில் எளிதில் தீப்பற்றத்தக்க எரிவாயு கசிவு அதன் விளைவாக ஏற்படும் பெரும் தீ ஆகியவற்றை நடித்துக் காட்டி முழு அளவில் அவசரகால தற்காப்புப் பயிற்சி—குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும். அவ்வாறு, தற்காப்புப் பயிற்சி நடத்தும்போது கண்டறியப்படும் குறைகள், வேறுபாடுகள் உடனடியாக சரி செய்யப்பட வேண்டும்.

13. *விதிவிலக்கு:—*

யாதொரு தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் விதிவிலக்கான சூழ்நிலையில் அல்லது அரிதான நடைமுறைகள் அல்லது வேறு காரணங்களுக்காக தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக இவ்விவர அட்டவணையின் அனைத்து விதித்துறைகள் அல்லது யாதொரு விதித்துறை அவசியமில்லை என்று தலைமை ஆய்வாளர் மன நிறைவடைந்தால், அவர் குறிப்பிடக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனைத்து விதித்துறைகளிலிருந்து அல்லது யாதொரு விதித்துறையிலிருந்து எழுத்து மூலமான சான்றிதழ் மூலம் அத்தொழிற்சாலைக்கு விலக்களிக்கலாம். அவர் தன் விருப்பப்படி எந்த நேரத்திலும் அதனை ரத்து செய்யலாம்.

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசுச் முதன்மை செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு) த் துறை..*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.